**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**
**முன்னிலை – திரு.பி.எஸ். ரஸ்கின்ராஜ், பி.ஏ.,எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.**
**2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12ம் நாள் வெள்ளிக்கிழமை**
**I.A.No.1/2025 in I.A.No.328/2021 in O.S.182/ 2021**

விஜயலெட்சுமி – மனுதாரர்/ 3ம் நபர்

/ எதிர் /

கவிதா – எதிர்மனுதாரர் / வாதி

1. ஆனந்தி
2. ராஜபாண்டி (இறப்பு)
3. மைனர். ரோஹித்

(மைனர் ரோஹித் என்பவருக்கு காப்பளராக அவருடைய தாயார் 1ம் பிரதிவாதி ஆனந்தி மூலம்)

– எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்

இவ்வுத்தரவு என் முன்பு 28.08.2025–ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர் / 3ம் நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.பாண்டியராஜன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.O.P.செல்வம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 3

பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்ப நடவடிக்கை எடுக்காமலேயே மனுதாரர்/ 3ம் நபர் மற்றும் எதிர்மனுதாரர் / வாதி ஆகிய இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்………

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 38, விதி 8 மற்றும் சட்டப்பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யயப்பட்ட மனுவாகும்.

### 1. மனுவின் சுருக்கம்:–

தாவா சொத்தானது ராஜபாண்டி அவர்களுக்கும் அவரது சகோதரர்களான மனுதாரருடைய கணவர் குணசேகரன் மற்றும் ஞானசேகரன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி வழக்கிடை சொத்துக்களில் ராஜபாண்டி அவர்களுக்கும், அவரது சகோதரர்கள் குணசேகரன் மற்றும் ஞானசேகரன் அவர்களுக்கும் தலா 1/3 பிரிவினையில்லாத பாகம் சித்தித்துள்ளது. 2ம் பிரதிவாதியான ராஜபாண்டி அவர்கள் மனுதாரர் / 3ம் நபரிடம்

26.11.2021—ம் தேதியன்று ரூ.4,00,000/— பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் ரூ.1க்கு ரூ. 100 க்கு ரூ.1/ வட்டி வீதம் வட்டினை இரண்டு வருட வாய்தாவிற்கு திரும்ப செலுத்தி ஈடுபத்திரத்தை செல்லுடன் வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும், தவறினால் தவறிய தேதி முதல் தொகை செலுத்தும் நாள்வரை மாதம் 1க்கு ரூ.100/—க்கு ரூ.1.50/— வீதம் வட்டியை செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையுடன் மேற்படி 26.11.2021—ம் தேதி மனுதாரருக்கு ஈடுகடன் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்.

அடுத்ததாக, மனுதாரருக்கு ஈடுபத்திரம் எழுதிக் கொடுத்த ராஜபாண்டி அவர்கள் இறந்துவிட்ட நிலையில் அவரது மனைவியான ஆனந்தியிடம் சென்று கொடுத்த பணத்தை திருப்பி கேட்டதில் இப்போது தருகிறேன் என கூறி 3 வருடங்கள் காலதாமதம் செய்துள்ளார். எனவே சந்தேகம் அடைந்த மனுதாரர் / 3ம் தரப்பினர் தாவா சொத்து குறித்து கடந்த 14.11.2024 அன்று வில்லங்கம் சரிபார்த்த போது மனுதாரரைப் போன்று கவிதா என்பரையும், சுதந்திரா தேவி என்பரையும் இறந்து போன ராஜபாண்டியும் அவரது மனைவி ஆனந்தியும் ஏமாற்றி பணம் பெற்றுள்ள விபரமும்

அதனால் ராஜபாண்டிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்வதற்காக I.A.328–2021 மனுவினை தாக்கல் செய்து அதன் உத்தரவினையும் வில்லங்கச் சான்றிதலில் பதிவேற்றம் செய்துள்ள விபரத்தினையும் தெரிந்து கொண்டுள்ளார். தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்வதற்காக I.A.No.328–2021ல் பிறப்பித்த உத்தரவை நீக்கரவு செய்தும் தொடர்ந்து வில்லங்க சான்றிதழில் பதிவேற்றம் செய்துள்ளதை நீக்கரவு செய்யவும் மனுதாரர் / 3ம் தரப்பினரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிருரையின் சுருக்கம்:–**

எதிர்மனுதாரர் / வாதியிடம் ஆனந்தி மற்றும் ராஜபாண்டி ஆகியோர்கள் கடந்த 05.06.2020–ம் தேதி குடும்ப செலவிற்காக ரூ.4,00,000/– பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக பிரமிசரி நோட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர் / வாதி பிரதிவாதிகள் மீது வரவேண்டிய தொகையை வரப்பற்றக்கோரி தாவா அசல் வழக்கு தாக்கல் செய்து தாவா அசல் வழக்கில் I.A.328 – 2021 தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யக் கோரி மனுத் தாக்கல் செய்து மேற்படி மனுவில்

நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து உத்தரவின் அடிப்படையில் உசிலம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கச் சான்றிதழில் பதிவேற்றம் செய்யப்பட்டது என்ற விபரம் மனுதாரர் / 3ம் நபருக்கு நன்கு தெரியும். மனுதாரர் / 3ம் நபர் ராஜபாண்டியின் உடன்பிறந்த சகோதரரான குணசேகரன் என்பவரின் மனைவியாவார். எதிர்மனுதாரர் / வாதி பிரதிவாதிகள் மீது கடந்த 27.07.2021–ம் தேதி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா அசல் வழக்கில் நீதிமன்றம் கடந்த 15.10.2022–ம் தேதி மனுச் சொத்துக்களை தீர்ப்பு செய்வதற்கு முன் ஜப்தி உத்தரவு பகரப்பட்ட நிலையில் மனுதாரர் / 3ம் நபர் அதற்கு முன்பு 26.11.2021 அன்று மனுச் சொத்துக்களை ஈடு அடமானம் பெற்றுள்ளார். மனுச் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நீதிமன்றம் மனுச் சொத்துக்களை ஜப்தி செய்ய உத்தரவிட்ட பின்பு அதை தெரிந்து கொண்டு மனுதாரர் / 3ம் நபர் வேண்டுமென்றே ஈடு அடமானம் பெற்றுள்ளது மோசடியான ஆகும். மனுதாரர் / 3ம் நபருக்கு நீதிமன்றம் மூலம் மனுச் சொத்துக்களை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்த விபரம் நன்கு தெரிந்தும் கெட்ட எண்ணத்தில்

மனு தாக்கல் செய்துள்ளார். மனுவில் உண்மைத்தன்மை இல்லை. எனவே, மனுவை தள்ளுபடி செய்யக் கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

***3.1.*** மனுதாரர் / 3ம் தரப்பினர் தாவா சொத்துக்களில் ராஜபாண்டி மற்றும் அவரது சகோதரர் குணசேகரன் மற்றும் ஞானசேகரன் ஆகியோர்களுக்கு 1/3 பாகம் உள்ளது. தாவா வழக்கில் 2ம் பிரதிவாதி ராஜபாண்டி அவரிடம் ரூ.4,00,000/த்திற்கு தாவா சொத்தை அடமானம் வைத்துள்ளார். மேற்படி அடமானம் செல்லாநிலையிலான ஆவணம் ஆகும். ராஜபாண்டி தனிப்பட்ட முறையில் தாவா சொத்தை அடமானம் வைக்க முடியாது. ஆகவே, தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்வதை நீக்கரவு செய்ய வேண்டும் என்பதாகும். வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. தாவா அசல் வழக்கானது, 12.12.2020–ம் தேதி ராஜபாண்டி மற்றும் ஆனந்தி இருவரும் சேர்ந்து வாதிடமிருந்து ரூ.4,00,000/– கடனாக பெற்றுக் கொண்டு

கடனுக்கு ஆதரவாக ஒரு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்துள்ளார்கள். மேற்படி கடனுறுதி சீட்டில் கண்ட பணத்தை திரும்ப கேட்டு பிரதிவாதிகளான ஆனந்தி மற்றும் ராஜபாண்டி ஆகியோர்களுக்கு எதிராக வாதி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்தை பிரதிவாதி கிரையம் செய்ய முயற்சித்ததால் வாதி தீர்ப்புக்கு முன் தாவா சொத்தை பற்றுகை செய்ய வேண்டும் என இடைநிலை மனு எண். 328 / 2021 தாக்கல் செய்து பிரதிவாதி ஒருதலைப்பட்சமாகியுள்ளதால் ஒருதலைப்பட்ச உத்தரவை பெற்று தாவா சொத்தை தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்யப்பட்டுள்ளது.

அடுத்ததாக, மனுதாரர் தாவா வழக்கில் 3ம் தரப்பினர் ஆவார். அவர் தன்னுடைய மனுவில் தாவா சொத்தானது, ராஜபாண்டி அவர்களுக்கும், அவர்களது சகோதரர்களான குணசேகரன் மற்றும் ஞானசேகரன் அவர்களுக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்து என்பதாகும். மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரர் தெளிவுபடுத்த வேண்டும். தாவா சொத்து கூட்டுகுடும்ப சொத்து என்பதற்கு மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் இல்லை. மேலும்,

தாவா சொத்தை ராஜபாண்டி மனுதாரருக்கு ஈடு வைத்திருப்பதாக கூறியுள்ளார். அதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மனு தாக்கல் செய்வதோடு மனுதாரரின் கடமை முடிந்ததாக கருத முடியாது.

அடுத்ததாக, எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை கவனத்தில் கொள்ளும் போது மனுச் சொத்து பிரதிவாதியான ராஜபாண்டிக்கு பிரவினையில்லாத கூட்டுக் குடும்ப சொத்து என கூறுவது உண்மையல்ல என்பதாகும்.

அடுத்ததாக, மனுதாரரிடம் தாவா சொத்தை ராஜபாண்டி அடமானம் வைத்து பணம் கடனாக பெற்றிருந்தால் மனுதாரர் ராஜபாண்டிக்கு எதிராக அடமான தொகையை கேட்டு புதியதாக ஒரு அசல் வழக்கு தாக்கல் செய்ய முடியும். தாவா சொத்தையும் இரண்டவதாக பற்றுகை செய்யலாம். மனுதாரர் / 3ம் தரப்பினர் தாவா சொத்தை அடமானம் பெற்றுவிட்டார் என்ற காரணத்திற்காக தாவா வழக்கில் தீர்ப்புக்கு முன் தாவா சொத்தை பற்றுகை செய்யப்பட்டதை ரத்து செய்ய முடியாது. மேலும், மனுதாரர் மனுவில் கோரியுள்ள போன்று 26.11.2021–ல் ராஜபாண்டியிடமிருந்து

தாவா சொத்தை அடமானம் பெற்றார் என்பதற்கு அடமான பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுவில் கோரியுள்ள சங்கதிகளை மனுதாரர் தெளிவுபடுத்தாததால் மனு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12-ஆம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.12 17:50:00 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-</u>**

--- இல்லை ---

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :—</u>**

**––– இல்லை –––**

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.12 17:50:14 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**I.A.No.1/ 2025 in**

**I.A.No.328/ 2021 in**

**O.S. 182/ 2021**

**நேரிய / வரைவு / உத்தரவு**

**12.09.2025**